# செயலட்டை – சுற்றாடல் (02)
## பிரமி கல்வி நிலையம்
S. மோகன் 0779685514

மாணவர் பெயர் : ......................................

✓ **ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. மின் சாதனப் பொருட்களை நாம் பயன்படுத்தும்போது கடைபிடிக்கவேண்டியவற்றில் ஒன்று?
   1) பயன்படுத்திய பின் முறையாகப் பராமரித்தல்
   2) பயன்படுத்துவதைக் குறைத்தல்
   3) பாவித்த பின் அப்படியே வைத்தல்
   4) அழகுபடுத்தி காட்சிப்படுத்தல்

2. மின் உபகரணங்களை சிக்கனமாக பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மை அல்லாதது?
   1) தேவையற்ற செலவுகள் தவிர்க்கப்படும்.
   2) மின் கட்டணம் குறையும்
   3) நீடித்த பாவனையைப் பெறலாம்
   4) சமையலறை அழகாக இருக்கும்

3. பின்வரும் கருவிகளில் இரும்பினால் மட்டும் ஆக்கப்பட்ட பொருள்?
   1) கத்தி 2) மண்வெட்டி
   3) அலவாங்கு 4) கோடரி

4. சுருதிப் பெட்டி, வயலின், சல்லாரி போன்ற உபகரணங்கள் காணப்படும் இடம்?
   1) பாடசாலை அலுவலகம் 2) வகுப்பறை
   2) சங்கீத அறை 4) விளையாட்டு மைதானம்

5. பாடசாலையிலுள்ள உபகரணங்கள், பண்டங்கள் தொடர்பான பதிவை பேணுவது?
   1) சம்பவத் திரட்டுப் புத்தகம் 2) வரவு இடாப்பு
   3) கூட்டறிக்கைக் கொப்பி 4) பொருட்பதிவேடு

6. விற்பனை நிலையங்களில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாத விதம்?
   1) விசா அட்டை 2) வவுச்சர்
   3) காசுக் கட்டளை 4) பணம்

7. தரமான பண்டங்கள் என்பவற்றை உறுதிப்படுத்தி சர்வதேச ரீதியாக வழங்கப்படும் தரச்சான்றிதழ் இலச்சினை?
   1) ISO 2) OIS
   3) IOS 4) SIO

8. அவசியம் காலாவதியாகும் திகதியை அவதானித்து வாங்கவேண்டிய பொருள்?
   1) தீப்பெட்டி 2) சீனி
   3) பால்மா 4) உப்பு

9. வியாபாரி விளம்பரம் செய்யப் பயன்படுத்தும் ஊடகம் அல்லாதது?
   1) வானொலி 2) தொலைக்காட்சி
   3) புத்தகம் 4) துண்டுப்பிரசுரம்

10. தரமற்ற பொருள் தொடர்பான முறைப்பாட்டை யாருக்குத் தெரிவிக்க வேண்டும்?
   1) உற்பத்தியாளருக்கு 2) நுகர்வோர் பாதுகாப்பு சபைக்கு
   3) சுகாதார திணைக்களம் 4) பாவனையாளர்

11. நாம் இலவசமாக பெறும் சேவைகள்?
   1) கல்வி, சுகாதாரம் 2) போக்குவரத்து, தபால் சேவை
   3) மின்சாரம், குடிநீர் 4) தொலைக்காட்சி, தொலைபேசி

12. ஆட்பதிவு திணைக்களம் வழங்கும் சேவை?
   1) குடிநீர் வசதி 2) கடவுச் சீட்டு
   3) தேசிய அடையாள அட்டை 4) வாக்காளர் அட்டை

13. வைத்திய சாலையில் சேவை பெறுபவர்?
   1) கிராம மக்கள் 2) பொது மக்கள்
   3) பயனாளிகள் 4) நோயாளிகள்

14. நீண்ட நாள் பாவனையிலுள்ள பொருட்கள்?
   1) இறைச்சி, மீன், முட்டை 2) அரிசி, சீனி, தேயிலை
   3) கீரை, காய்கறி, பருப்பு 4) பருப்பு, பழம், கீரை

15. ஒரு பொருளை கொடுத்து அதற்குப் பதிலாக வேறொரு பொருளை வாங்குவது?
   1) கொடுக்கல் வாங்கல் 2) வியாபாரம்
   3) விற்பனை 4) பண்டமாற்று

16. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்?
   1) கருவாடு 2) தேயிலை
   3) பால்மா 4) குடிநீர்

17. பொருட்களை வாங்குவோரை அழைக்கப்படும் முறை?
   1) வியாபாரி 2) நுகர்வோர்
   3) முகவர் 4) தரகர்

18. இலங்கை அரச தொலைபேசி நிறுவனம் ?
   1) டயலொக் 2) சன்டெல் 3) ரெலிகொம் 4) லங்காபெல்

19. பின்வருவனவற்றுள் பூச்சி இனத்துள் அடங்காதது?
   1) இராமபானம் 2) உண்ணி 3) நுளம்பு 4) குளவி

20. கால்களற்ற ஊர்ந்து செல்லும் பிராணி?
   1) உடும்பு 2) நத்தை 3) மரவட்டை 4) பூரான்

21. செட்டைகளை பயன்படுத்தி இடம் பெயரும் பிராணி?
   1) முதலை 2) இறால் 3) புறா 4) மீன்கள்

22. மருத்துவப் பானம் ஒன்றை தயாரிக்கும் ஆற்றல் கொண்ட பிராணி?
   1) குளவி 2) வண்டு 3) தேனீ 4) தேள்

23. நீரிலே தனது வாழ்க்கை வட்டத்தை ஆரம்பிக்கும் பிராணி?
   1) நுளம்பு 2) வீட்டு ஈ 3) எலி 4) வண்டு

24. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை சரியாக காட்டும் தொகுதி?
   1) நிறையுடலி, குடம்பி, முட்டை, கூட்டுப்புழு
   2) நிறையுடலி, முட்டை, கூட்டுப்புழு, குடம்பி
   3) முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி
   4) முட்டை, கூட்டுப்புழு, குடம்பி, நிறையுடலி

S.Mohan

25. வண்ணத்துப்பூச்சி முட்டையிடுவது?
1) பூவின் மேற்பகுதியில் 2) பூவின் கீழ்பகுதியில்
3) இலையின் மேற்பகுதியில் 4) இலையின் கீழ்பகுதியில்

26. மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாதங்களை கொண்டிருக்கும் பிராணி?
1) எலி 2) பல்லி 3) கரப்பான் 4) சிலந்தி

27. பாதுகாப்பிற்காக தோலின் நிறத்தை மாற்றக்கூடிய பிராணி?
1) மீன் 2) பூனை 3) ஓணான் 4) பாம்பு

28. தாவரங்களை மாத்திரம் உணவாக உட்கொள்ளுபவை?
1) காகம், வெட்டுக்கிளி 2) எலி, யானை
3) மைனா, நத்தை 4) முயல், மான்

29. இலங்கை நாட்டுக்கே உரித்தான பறவை இனத்தினுள் அடங்காதது?
1) சபன் கோழி 2) நாகணவாய் 3) மயில் 4) நீலப்புள்

30. எமது நாட்டிற்கு உரித்தான நகருயிரிகளுள் அடங்குவது.
1) கொம்பு ஓணான் 2) உடும்பு 3) ஆமை 4) பல்லி

31. பின்வருவனவற்றுள் முலையூட்டி அல்லாத பிராணி?
1) கடற்சிங்கம் 2) வாத்து 3) திமிங்கலம் 4) வௌவால்

32. முட்டையிட்டு குஞ்சு பொரித்து பாலூட்டும் பிராணியாக அமைவது?
1) வௌவால் 2) சுண்டெலி 3) மைனா 4) பிளாற்றிஸ்பஸ்

33. பிராணிகளை பாதுகாப்பதற்கு நாம் செய்யக்கூடாத செயல்களில் ஒன்று?
1) புகலரண்களை அமைத்தல் 2) உணவு வழங்குதல்
3) வாழிடங்களை அழித்தல் 4) நீர் வழங்குதல்

34. பிராணிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும் மனித செயற்பாடாக அமைவது?
1) பழமரங்களை நடுதல் 2) புற்களை நடுதல்
3) வீட்டுத்தோட்டம் செய்தல் 4) காடுகளை எரித்தல்

35. குப்பை கூளங்களை உக்கலடைய செய்யும் பிராணி?
1) எறும்பு 2) உடும்பு 3) கறையான் 4) பாம்பு

36. இலங்கைக்கு மட்டும் உரித்தான மீனினம் அல்லாதது?
1) புள்ளிக்கோட்டி 2) மள்புளுட்டா 3) பாரை 4) புலத்ஹய்யா

37. “மண்ணை கிண்டி உழுதிடும் மனிதருக்கு நண்பன் நான்…..” என்ற பாடலில் குறிப்பிடப்படும் பிராணி?
1) கறையான் 2) எருது 3) பசு 4) மண்புழு

38. மிக வேகமாக ஓடும் பறவை?
1) கிவி 2) கழுகு 3) மயில் 4) தீக்கோழி

39. பின்வருவனவற்றுள் முள்ளந்தண்டு அற்ற பிராணி?
1) பாம்பு 2) தவளை 3) எலி 4) மண்புழு

40. உணவு உண்ட பின் ஓய்வான நேரத்தில் இரை மீட்கும் பிராணி?
1) மைனா 2) மாடு 3) யானை 4) நாய்

41. அதிக வெப்ப பிரதேசங்களில் வாழக்கூடிய மிருகம்?
1) ஆடு 2) பூனை 3) ஒட்டகம் 4) புலி

42. இரையை பிடிப்பதற்காக தனது வாழிடத்தை அமைத்துக் கொள்ளும் பிராணி?
1) நத்தை 2) சிலந்தி 3) வெட்டுக்கிளி 4) பருந்து

43. ஓட்டினுள் புகுந்து பாதுகாப்பு தேடாத பிராணி?
1) சிப்பி 2) நத்தை 3) வண்டு 4) கடலாமை

44. இலங்கைக்கு உரிய முலையூட்டிகளில் அடங்காதது?
1) மரநாய் 2) கருங்குரங்கு 3) சுண்டெலி 4) குதிரை

45. வெடி மருந்துப் பொருட்களை கண்டுபிடிப்பதற்கு காவல் துறையினருக்கு உதவும் பிராணி?
1) ஒட்டகம் 2) நாய் 3) குதிரை 4) யானை

46. இரவு நேரத்தில் ஒலி எழுப்பி உணவு தேடும் பிராணி?
1) மாடு 2) வௌவால் 3) கொக்கு 4) மயில்

47. இரவு நேரங்களில் விளக்கின் ஒளியை நாடி வரும் பூச்சியினம் ?
1) பனிப்பூச்சி 2) ஈசல் 3) அந்துப்பூச்சி 4) சிலந்தி

48. ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் பறவை
1) சேவல் 2) காகம் 3) குயில் 4) செண்பகம்

49. தோலினால் சுவாசிக்கும் பிராணி?
1) மண்புழு 2) கணவாய் 3) பாம்பு 4) தவளை

50. பின்வருவனவற்றுள் ஊன் உணவுகளை மாத்திரம் உண்ணும் பிராணி?
1) நாய் 2) பூனை 3) காகம் 4) புலி

51. நத்தைகளை உணவாக உட்கொள்ளும் பறவை?
1) காகம் 2) வௌவால் 3) செண்பகம் 4) மைனா

52. இலங்கையில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்?
1) குமண 2) பின்னவல 3) வில்பத்து 4) யால

53. வருடம் முழுவதும் பூத்துக் காய்க்கும் தாவர வகை எது?
1) தென்னை 2) றம்புட்டான் 3) பலா 4) வேம்பு

54. நகருயிர் (ஊர்வன) வகைக்குள் அடங்கும் பிராணி வகை
1) தவளை 2) சிலந்தி 3) மீன் 4) முதலை

55. ஒலிம்பிக்போட்டியில் முதன்முதலாக பதக்கம் வென்று இலங்கைக்கு சர்வதேச ரீதியில் புகழ் தேடிக் கொடுத்தவர்
1) சுசந்திக்கா ஜயசிங்க 2) அர்ஜூன ரனதுங்க
3) சனத் ஜயசூரிய 4) டங்கன் வைட்

56. பின்வரும் விலங்குகளில் ஈரூடக வாழியாக கருதப்படும் விலங்கு
1) ஆமை 2) தவளை 3) முதலை 4) பாம்பு

57. இலங்கையில் உள்ள உலக மரபுரிமைகளில் ஒன்று
1) திருகோணமலைத் துறைமுகம் 2) கட்டுநாயக்க விமான நிலையம்
3) மகாபோதி விருட்சம் 4) மத்தள விமான நிலையம்

58. எமக்கு சேவைகள் வழங்கும் உள்ளூராட்சி நிறுவனங்களில் ஒன்று
1) பிரதேச சபை 2) மாவட்ட செயலகம்
3) பிரதேச செயலகம் 4) பொலிஸ் நிலையம்

S. Mohan